1989 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளபடி, இதை நிவர்த்தி செய்வதற்காக, அவர்களுக்குக் கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் 2 மாத காலத்திற்கும், மாதம் ரூ. 50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூபாய் 200 வழங்கப்படும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படும். இத் திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையிலே, ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

82. வெகு விரைவில், அனைத்து நாடுகள் விவசாய வளர்ச்சி நிதி உதவியுடன், பெரியதொரு திட்டம் செயலாக்கப்பட உள்ளது. சேலம், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ரூ. 45.80 கோடி அளவில், சுமார் 40,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய 7 ஆண்டு காலத் திட்டமாக இது நிறைவேற்றப்படும்.

83. பரம்பரைச் சொத்து தொடர்பாக, இந்துச் சட்டத்தின்கீழ் ஆண் வாரிசுக்கு உள்ளது போன்று பெண் வாரிசுக்கும் சம உரிமை வழங்க வகைசெய்து, 1956ஆம் ஆண்டு இந்து வழியுரிமைச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்துள்ளோம். அதற்கான சட்ட மூன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

தேர்தல் வாக்குறுதிகள்

84. எந்தத் தேர்தல் அறிக்கைக்கு மக்கள் ஒப்புதல் தந்து, அவற்றை நிறைவேற்றுமாறு பணித்து, எங்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களோ, அந்தத்